1978 மார்ச் 20]

[262-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 1978-79 பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டம் இவ்விரு சட்டங்களின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றை நிர்வகிப்பது போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். மோட்டார் வண்டிகள் சட்டம் ஒழுங்கு முறைப் படுத்துவதற்கான சட்டமாகும். இச்சட்டம், மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வண்டிகளைக் கட்டுப் படுத்துதல், ஓட்டுநர் உரிமம் வழங்கல், போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல்) மோட்டார் வண்டி விபத்து ஈட்டுறுதி செய்தல் ஆகியவற்றிக்கு வகை செய்கிறது. பயணிகள், சரக்குகள் போக்கு வரத்திற்கானப் போதுமான வசதிகளைச் செய்து தந்து, அப்போக்குவரத்தில் மக்கள் பாதுகாப்பிற்கு உறுதி செய்வதும் இதன் குறிக்கோளாகும்.

3. பொது மக்களுக்கு வசதி எனக் கருதப்படும் வழித் தடங்களில் பயணிப் பேருந்துகள் ஓட்டுவதற்காகப் போக்குவரத்து அதிகாரிகளால் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. வாடகை சிருந்துகளுக்கும், சரக்குப் பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள், தாராளமாக வழங்கப்படுகின்றன. ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குவதையும் அவர்கள் ஓட்டும் வேகத்தையும் கட்டுப் படுத்துதல், சரக்கு வண்டிகளில் ஏற்றும் பளுவை ஒழுங்குப்படுத்தல், பயணிப் பேருந்துகளில் இருக்கைகள், இடைவெளி வசதியாக அமைத்தல், ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல், போக்குவரத்து வண்டிகளை கால முறைப்படி முழுமைகாகத் தணிக்கையிடல் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்குப் பாதுகாப்பும் வசதியும் உறுதி செய்யப்படுகிறது.

4. மோட்டார் வண்டிகள் மீதான வரியை வசூல் செய்வதும் போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். போக்கு வரத்து வண்டிகளின் மீதான வரி, போக்குவரத்துத் துறையால் நேரடியாக வசூல் செய்யப்படுகிறது. மோட்டார் கார்கள் போக்கு வரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரிவசூலிப்பு மாவட்டங்களில் கருவூலங்கள் மூலமும் சென்னை மாநகரில் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் காவல் நிலையங்கள் மூலமும் வசூல் செய்யப்படுகிறது.

5. 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், வரி விதிப்பு அடிப்படையைச் சீரமைக்கவும் பயணி வண்டிகள் சரக்கு வண்டிகள் அல்லது இவ்விருவகை வண்டிகளின் மீதான பல்வேறு வரிகளை ஒருங்கிணைப்பதைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதாகும்.

போக்குவரத்து வசதிகளை அமைத்துத் தருவதில் போக்கு வரத்துத் துறை போக்குவரத்துத் தேவைகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. ஒரு புதிய வழித்தடத்தைத் தொடங்குவது சிக்கலான நடைமுறையாக இருந்து வந்தது. 1971ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால், புதிய வழித்தடங்களை தொடங்குவதில் நிலைமை சீரடைந்துள்ளது. இச்சட்டத்தின் படி புதிய வழித்தடம் ஒன்றைத் தொடங்குவது என்பது, நிர்வாகப் பணி எல்லைக்குள் அமைந்து, அதிகாரியின் தீர்ப்பே முடிவானது என அமைகிறது.

போக்குவரத்துத் தொடர்பற்ற, வெகு தொலைவிலுள்ள மலைப்பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதியளிப்பதற்காக அந்த பகுதிகளில் ஜீப் வகை சிறு பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்த ஜீப் பேருந்துகளுக்கு 25 சதவீத வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து வசதி யற்ற பகுதிகளிலும், இராமேசுவரம் தீவிலும் சிறுசக்கரபீடம் அமைந்த சிறிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்தப் பேருந்து களுக்குச் சலுகை வீதத்தில், பயணி ஒருவருக்கு காலாண்டிற்கு மேல் வரிக் கட்டணத்தையும் சேர்த்து ரூ. 50 வீதம் வரி விதிக்கப் படுகிறது. கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த

1978 மார்ச் 20]

நிலக்கோட்டை வட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு, வாணியம்பாடி வட்டங்களிலும் அண்மையில் சிறு பேருந்துகள் சோதனை அடிப்படையிலான ஏற்பாட்டின்படி விடப்பட்டுள்ளன. இத்தகைய பேருந்துகளுக்கு, காலாண்டுக்கு பயணி ஒருவருக்கு (மேல்வரி உட்பட) ரூ. 50 எனும் சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படுகின்றது.

போக்குவரத்துத் தொழிலில் ஏகபோக உரிமையையும், அனுமதிச் சீட்டுகள் சிலரிடம் குவிவதையும் தடுப்பதைக் கருத்திற் கொண்டு, ஓர் உரிமையாளருக்கு பத்துப் பேருந்து அனுமதிச் சீட்டுகளுக்கு மேல் இருக்கலாகாது என உச்சவரம்பு விதித்து 1971ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் செல்லுபடியை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டு, அது இன்னும் பைசலாகாமல் உள்ளது. எனினும், 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தின்கீழ், உபரி அனுமதிச் சீட்டுகளை அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

பயணிப் பேருந்து வண்டிகளுக்குப் பயணக் கட்டணப் பட்டிலுக்குப் போக்குவரத்து அதிகாரி ஒப்புதல் அளிக்க வேண்டும். இக்கட்டண வீதத்தில் ஒரே சீரான நிலை இருக்கும் பொருட்டு, அரசே கட்டண வீதங்களை நிர்ணயித்துள்ளது. இவ்வாறு நிர்ணயிப்பதில் பொது மக்கள், பேருந்து உரிமையாளர்களின் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. பயணிப் பேருந்துகளுக்கான உயரளவு கட்டண வீதம் வரையறை செய்யப்பட்டு 12–3–1976ஆம் நாளன்று திருத்தியமைக்கப்பட்டது.

வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆகியவற்றிற்கான கட்டண வீதம் பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் திருத்தியமைக்கப்பட்டது.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு தாராளமாக மக்கள் போக்குவரத்தும் சரக்குகள் போக்குவரத்தும் நடைபெறுவதற்கு, வசதியாக அண்டை மாநிலங்களோடு, பரிமாற்ற

ஏற்பாட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வொப்பந்தங்களின்படி ஒவ்வொரு மாநிலமும் பேருந்துகள் விடுவதற்கான வழித் தடங்கள் இன்னவை என ஒதுக்கப்பட்டு, சரக்குப் பேருந்துகள், மற்ற வண்டிகள் ஆகியவற்றிற்கான அனுமதிச் சீட்டு மேலொப்பம் தரப்படும் என்பது பற்றிய எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்படுகிறது. பயணிப் பேருந்துகளைப் பொறுத்த வரையில், வழித்தடங்கள் பொதுவாக அந்தந்த மாநிலங்களில் ஓடும் கிலோ மீட்டர் தூரத்தில் சமநிலை இருக்கும்படியாக ஒதுக்கப்படுகின்றன. புதுச்சேரியுடன் ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்படுவதற்கான வரைவுச் செயற் குறிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை மாற்றி அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

6. இந்தியா முழுவதும் அல்லது ஐந்துக்குக் குறையாமல் ஒன்றை ஒன்று ஒட்டியுள்ள மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரத்து எளிதாக நடைபெறும் பொருட்டு, சரக்கு வண்டிகளுக்கான தேசிய அனுமதிச் சீட்டு வழங்குவதற்காக இந்திய அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இம்மாநிலத்திற்காக இந்திய அரசு வரையறுத்துள்ள அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 400 ஆகும். இவற்றில் இதுவரை 390 அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள அனுமதி கோரிக்கையாளர்கள் அனுமதி சீட்டு அளிப்பதற்கான பத்திரங்களை தாக்கல் செய்ய வில்லை.

7. பொது இடத்தில் மோட்டார் வண்டியை ஓட்டிச்செல்ல உரிமம் ஒன்று பெற்றிருக்க வேண்டும். தொழில்முறை ஓட்டுநர்களும் போக்குவரத்து வண்டிகளுக்கான ஓட்டுநர்களும் மருத்துவச்சான்று பெற்றிருத்தல் வேண்டும். ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஒழுங்குபடுத்தவும் அவை உரிமம் பெறச் செய்யவும் விதிகள் இயற்றப்பெற்றுள்ளன. ஓட்டுநர்களை நன்கு கண்காணித்து ''புள்ளி முறை கட்டுப்பாடு'' என்ற ஒரு முறையைச் செயற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறையின்கீழ் ஓட்டுநர் ஒருவர் விதிகள் மீறல் ஒவ்வொன்றுக்கும் இத்தனைப் புள்ளி எனக் கணக்கிட்டு, ஒரு குறிப்பிட்ட எணிண்க்கையுள்ள புள்ளிகளைப் பெற்றவுடன் தானாகவே ஓட்டுநர் உரிமம் செல்லுப்படி இல்லாமல் போகும். இவ்வாறு செய்வதற்கான ஏற்பாடு பரிசீலனையில் உள்ளது.

தேசீய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் அல்லது முக்கியமான மாவட்டச் சாலைகளில் பக்கத்தில் உள்ள கிராமங்களை இணைக்கிற நெடுஞ்சாலைச் செல்வழித் தடங்களில் அல்லது கிராமத் தொடர்பு சாலைகளில் சிறு பேருந்துகளையும், சிறு ஒப்பந்த வண்டிகளையும் விடும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1978 மார்ச் 20

8. மோட்டார் வண்டிகள் சட்டம், மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வருவாய் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

(1)	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1977-78. (2)	திருத்த மதிப்பீடு. 1977-78. (3)	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1978-79. (4)
	(ரூபாய் ஆயிரத்தில்.)		
1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் வருவாய்.	1,48,72	1,59,85	1,66,75
தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் வருவாய்.	48,49,28	48,94,22	50,74,28
ஏனைய வருவாய்கள்	2,00	2,30	2,30
மொத்தம் ..	50,00,00	50,56,37	52,43,34

9. செலவினங்களில், 1977–78 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீடு 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1977—78 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	94·50
1977—78ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு ..	90.68
1978—79 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	93·53

கருவூலங்கள் மூலம் வசூலிக்கப்படுகின்ற போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரிகள் வசூலுக்கான செலவு இதில் சேர்க்கப்படவில்லை.

10. போக்குவரத்துத் துறையன்றி, காவல் துறையும் மோட்டார் வண்டிகள் சட்டம், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டம் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரி செலுத்தப்படுகிறதா எனக் கண்காணிக்கும் பொறுப்பும் காவல் துறையினுடையதாகும்.